**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.10.2025**
**OS. No. 118/2016**
**வழக்கு சாட்சி PW.1–செல்லக்கிளி, க/பெ. காத்தமுத்து**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

22) 30.07.1998ம் தேதியில் என் தகப்பனார் கிருஷ்ணன் இறந்துவிட்டதாக வா.சா.ஆ.2 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போதற்கு என் தகப்பனார் இறந்து 27 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். தற்போது வரை கூட்டுப்பட்டாவில் என் பெயரும் சேர்க்கவேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் கூட்டுப்பட்டாவாக செய்து வைத்துள்ள விவரமே எனக்கு தெரியாது. தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு யாருடைய பெயரில் உள்ளது என்று ஆவணங்கள் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் முதலில் என் தகப்பனார் பெயரில் தான் இருந்தது. பின்பு பிரதிவாதிகள் மாற்றி எழுதி கொண்டது தெரிந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதலில் 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு என் வழங்கறிஞரிடம் விவரங்களை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன்.

23) வா.சா.ஆ–4 ஆக அமரம் கிராம நிர்வாக சான்றிதழ் என்று ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சான்றிதழில் மனுதாரர் மகாராஜன் தகப்பனார் பெயர் C.கிருஷ்ணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் பட்டா எண்.50 என்றும் சின்னகுழந்தை மகன் கிருஷ்ணன் என்பவர் பட்டாதாரர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. பட்டா எண்.50, ச.எண்.57/1B, புஞ்சை 0.01–0 ஹெக்டேர்ஸ், தீர்.0.06 என்றும், ச.எண்.57/5C,பு.0.05–5 ஹெக், தீர் 0.21 என்றும் ச.எண்.57/5F, பு.0.13–0, தீர் 0.50 என்றும் ஆக மொத்தம் 0.19.5, தீர்.0.77 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது.

24) அந்த சான்றிதழில் ச.எண்.57/5L என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது, ஆனால் என் தந்தை பெயரில் தான் இருந்தது. அந்த சான்றிதழில் மேலே தெரிவிக்கப்பட்ட நபருக்கு கீழ்கண்ட ஸ்தாபன சொத்துக்கள் மேற்படி கிராமத்தில் இருக்கிறது. கீழ்கண்ட ஸ்தாபன சொத்துக்கள் மேற்படியாரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படியாரின் சொந்தமானது என்றும், நேரே விற்க பாத்தியம் உள்ளது என்றும், சான்று செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது.

25) அமரம் கிராம ச.எண்.57/5Lல் 1.16 ஏக்கர் நிலம் 2ம் பிரதிவாதி கோபாலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி ச.எண்.57/5Lன் நிலத்தினை நில உடமை மேம்பாட்டு திட்டத்தில வழங்கப்பட்ட பட்டா எண்.50ல் சேர்த்து தவறுதலாக சின்ன குழந்தை மகன் கிருஷ்ணன் பெயரில் வழங்கப்பட்டுவிட்டது என்றும் ச.எண்.57/5 நிலத்தினை பட்டா எண்.50ல் இருந்து நீக்கம் செய்து, இந்த 2ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கவேண்டி, 2ம் பிரதிவாதி மேட்டுர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அதன் பேரில் ச.எண்.57/5L பட்டா எண்.50ல் இருந்து நீக்கம் செய்து, பட்டா எண்.471ல் 2ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

26) பட்டா எண்.471ல் கண்ட ச.எண்.57/5L என்ற நிலம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தில் 2ம் பிரதிவாதி கோபால் குடியிருந்து, அனுபவம் செய்து வருகிறார் என்றும், அந்த சொத்தில் 2ம் பிரதிவாதி 30 சென்ட் நிலத்தை தனது மகனான 3ம் பிரதிவாதி முத்துவிற்கு செட்டில்மெண்ட எழுதி கொடுத்து, அந்த சொத்தில் 3ம் பிரதிவாதி வீடு கட்டி, மீத நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. பட்டா எண்.471ல் கண்ட ச.எண்.57/5Lல் என் தகப்பனார் கிருஷ்ணனுக்கோ, எனக்கோ, என் சகோதரர் மகாராஜனுக்கோ, அன்பழகனுக்கோ எந்த உரிமையும், பாத்தியமும் இல்லை என்றும், நாங்கள் எந்த காலத்திலும் சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

27) நானும், என் சகோதரர்களும் ஒன்றாக சேர்ந்து கொண்டு நில உடமை மேம்பாட்டு திட்டத்தின்போது தவறுதலாக வழங்கபட்ட பட்டா எண்.50ன் அடிப்படையில் மோசடியாக பட்டா எண்.471ல் கண்ட ச.எண்.57/5Lல் கண்ட சொத்தை 2, 3 பிரதிவாதிகளிடமிருந்து அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் எ ன்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் தந்தை கிருஷ்ணன் 14.06.1996ம் தேதியில் என் சகோதரர் அன்பழகன் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும், அது எப்போதும் நடைமுறைக்கு வரவில்லை என்றும், ச.எண்.57/5Lல் கண்ட 1.16 ஏக்கர் நிலம் 2, 3 பிரதிவாதிகள் தான் முழு உரிமையாளர்கள் மற்றும் சுவாதீனகாரர்கள் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.